# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 360/மா/2025
நாள் 10.04.2026

| | | |
|---|---|---|
| Dr. R. அரவிந்தகுமார்<br>மதுரை | --- | முறையீட்டு மனுதாரர் |
| உதவி ஆணையாளர்,<br>மண்டலம் 2 (வடக்கு),<br>மதுரை மாநகராட்சி. | --- | எதிர்மனுதாரர் |

மதுரை–625 020, அண்ணா நகர், முதலாவது கிழக்கு மெயின் ரோடு, பிளாட் எண் 318 என்கிற முகவரியில் வசிக்கும் Dr. R. அரவிந்தகுமார் என்பவரின் 15.09.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.09.2025 அன்று பெறப்பட்டு 360/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை–625 020, அண்ணா நகர், முதலாவது கிழக்கு மெயின் ரோடு, பிளாட் எண் 318 என்கிற முகவரியில் வசிக்கும் Dr. R. அரவிந்தகுமார் என்பவர் தனது 15.09.2025 நாளிட்ட மனுவுடன் இணைத்துள்ள 06.08.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"'I along with my wife, both senior citizens, own and operate a hospital in Madurai within the jurisdiction of Madurai Municipal Corporation in the name and style of RR Hospital. The said hospital is located at 345, Aringar Anna Nagar, MIG Colony, Madurai 625 020. It is an NABH accredited hospital and has been running without any complaints till now. It is pertinent to add that in line with our mission, we provide quality healthcare to the downtrodden at affordable rates. We also provide free surgical and medical treatment to orphans. The hospital is assessed to property tax vide assessment no. 115/035/900580 corresponding to the old assessment no. 115/16399. Since its establishment, I have been prompt and regular in paying the property tax dues to the Madurai Municipal Corporation. From 1.4.2012 to 31.3.2022, I have been paying property tax at a rate of Rs. 4,26,276 per annum. From 1.4.2022 till 31.3.2024, I have been paying property tax at a rate of Rs. 8,52,552 per annum.

Inexplicably, for the period between 1.4.2024 and 31.3.2025, Rs.9,07,635/- was collected from me as property tax, To my utter shock I have been asked to pay Rs. 9,30,318 for the period between 1.4.2025 and 31.3.2026. I would like to notify here that my property is only 7-$^{1/}{}_{2}$ cents (seven and a half cents) like any other building it the same street.

In March 2022, property tax was hiked. I am given to understand that shortly thereafter the hike was withdrawn. Even then, for reasons best known to the Corporation, I have been assessed to the increased tax rate viz-a-viz previous financial years.

The property tax levied on my hospital building is significantly higher than that of other similarly sized and situated buildings in the vicinity, from 2010 which are used for commercial purposes. I would like to notify here that my property is only 7-$^{1/}{}_{2}$ cents (seven and a half cents) like any other building it the same street.

When I raised the gross disparity in tax with the concerned personnel, the reply was that area of my hospital is higher than that of other buildings pointed out by me. A comparison of the property tax assessed for my hospital with that of other similarly sized buildings in the vicinity would bring out the gross anomaly in assessment. Mere visual inspection of my hospital with the buildings nearby assessed to much lower taxes would indicate that my hospital is much smaller than the buildings shown undue favour. As per the assessment records my property has a total area of 8785.00 sq.ft. I found that the total area recorded for several commercial buildings nearby have been vastly understated, which directly results in a reduced tax liability. I was shocked to find out that the recorded total area in assessment records for several of the commercial buildings nearby is much less than ours, while in fact it would be apparent by visual inspection that it would be much higher than our property. The above discrepancy appears deliberate indicating collusion and favouritism between the officials of the Madurai Municipal Corporation and the owners of those buildings to undervalue the tax burden on those properties, while subjecting my establishment to an inflated tax assessment.

My efforts to obtain clarification and seek rectification from Corporation officials have yielded no response or remedy, reinforcing the belief that the officials are either indifferent or complicit in the matter. Relating to this issue I had given a complaint to the commissioner of corporation in October 2022 in person.

This complaint is being filed under Section 7(b), (d) and (g) of the Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014 which permits inquiry into:

- Abuse of position by an official or elected representative,
- Decisions causing wrongful loss or benefit to any person, and
- Maladministration in the functioning of local bodies.

The actions or inaction of the officials in this case are a clear case of maladministration, and the selective under assessment of property tax for certain buildings while I am being over assessed.

I submit that we have a lot of other expenses including IT, Commercial EB charges, etc. In light of this inflated property tax assessment threatens the very survival of our hospital.
I humbly request the Hon'ble Ombudsman to:

1. Initiate an inquiry into the property tax assessments carried out by Madurai Municipal Corporation in my locality.
2. Verify the built-up area and use classification of similarly sized and situated buildings, especially the one I have referred to.
3. Set right the anomaly between my property and other properties in the vicinity in property tax assessment and collection.
4. Adjust the excess amount collected qua my property towards future property tax dues.
5. Ensure fair reassessment of properties and refund or revise the tax burden imposed on my hospital, if found excessive or discriminatory."

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 27.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளர் தனது 26.12.2025 மற்றும் 16.03.2026 நாளிட்ட கடித எண் ம2/ஆ7/007705/2025–ன் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"அரசாணை (நிலை) எண் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை நாள் 30.3.2022–இல் மாநகராட்சிகளில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளுக்கான சேவைகளுக்கும், உட்கட்டமைப்புகள் வழங்கவும், மத்திய அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ்பெறும் மான்ய நிதியினை மாநகராட்சிகள் பெற்று பயன்படுத்திக் கொள்ள நிதித் தேவைகளை கருத்தில் கொண்டு 15–வது நிதிக்குழு விதித்த தொடக்க நிலை கட்டாய நிபந்தனைகளின்படி மாநகராட்சியில் சொத்துவரி மறு சீராய்வு செய்து வரி உயர்வு செய்திட உத்திரவுகள் வழங்கப்பட்டது.

சொத்துவரி உயர்த்துவதற்காக பரிசீலிக்க தமிழ்நாடு அரசால் குழு அமைக்கப்பட்டது. அரசால் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையினை அரசு ஏற்றுக் கொண்டு அதன்படி தமிழ்நாடு முழுவதும் உள்ள மாநகராட்சிகளில் சொத்துவரி பொதுச்சீராய்வு செய்து, பல்வேறு காரணிகள் அடிப்படையில் 15–வது நிதிக்குழு விதித்த கட்டாய நிபந்தனைகளின்படி மத்திய அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் மான்ய நிதியினை பெறுவதற்காக தமிழ்நாடு அரசு அமைத்த குழு பரிந்துரைத்தவாறு சொத்துவரி உயர்வு காரணிகள் அடிப்படையில் மாநகராட்சிகளில் சொத்துவரி உயர்த்திட அரசாணை (நிலை) எண் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை நாள் 30.3.2022–இல் ஆணை வெளியிடப்பட்டது. மேற்கண்ட அரசாணையின்படி சொத்துவரி உயர்வு பின்வருமாறு உள்ளது.

அ. குடியிருப்பு சொத்துக்கள்

| பரப்பளவு (சதுரடியில்) | சென்னை மாநகராட்சி வரி உயர்வு காரணி | சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் இதர மாநகராட்சிகள் வரி உயர்வு காரணி |
|---|---|---|
| < = 600 | 1.5 | 1.25 |
| 601 – 1200 | 1.75 | 1.5 |
| 1201 –1800 | 2 | 1.75 |
| > = 1800 | 2.5 | 2 |

ஆ. குடியிருப்பு அல்லாத சொத்துக்கள்

| இனம் விவரம் | சென்னை மாநகராட்சி வரி உயர்வு காரணி | சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் இதர மாநகராட்சிகள் வரி உயர்வு காரணி |
|---|---|---|
| தொழிற்சாலை | 2 | 1.75 |
| வணிகம் | 2.5 | 2 |
| **சிறப்பு இனங்கள்** (உணவகம் / கல்யாண மண்டபம் / மருத்துவமனை / திரையரங்கம் / சென்னை மாநகரம் மட்டும் ) | வணிக அடிப்படையில் வரிவிதிப்பு செய்யப்படும் | வணிக அடிப்படையில் வணிக சொத்துகளுக்கு வரிவிதிப்பு செய்யப்படும் |
| தனியார் பள்ளிகள் / கல்லூரிகள் / சுயநிதிபடிப்பு / துறைகள் நிதி உதவி பெறும்கல்வி நிறுவனங்கள் உட்பட | 2 | 1.75 |

மேற்படி அரசாணை வழிகாட்டுதலின்படி சொத்துவரி உயர்வு காரணி அடிப்படையில் சொத்துவரி பொதுச்சீராய்வின் போது 1.4.2022 முதல் மதுரை மாநகராட்சி உட்பட்ட அனைத்து மாநகராட்சியிலும் குடியிருப்புகள் மற்றும் குடியிருப்பு அல்லாத வரிவிதிப்புகளுக்கும் சொத்துவரி உயர்வு செய்யப்பட்டது.

அவ்வாறே இப்புகார் மனுதாரரது R.R.மருத்துவமனை மருத்துவமனை சொத்துவரி வரிவிதிப்பு எண் 115/035/900580க்குரிய ஒரு அரையாண்டு சொத்துவரி ரூ. 213138/–லிருந்து ரூ. 426276/– ஆக சொத்துவரி உயர்வு காரணி அடிப்படையில் 1.4.2022 முதல் வரி உயர்வு செய்யப்பட்டது.

அதன்பிறகு தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 113/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ((MA IV)) துறை நாள் 5.9.2024ன்படி நடப்பில் இருந்த சொத்துவரி மீது 6 சதவீதம் உயர்வு செய்து சொத்துவரி உயர்த்தப்பட்டது.

மேலும் புகார் மனுதாரரது வரிவிதிப்பு கட்டிடம் மேற்படி அரசாணை (நிலை) எண் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை நாள் 30.3.2022 இன்படி வணிக வகைப்பாட்டின் கீழ் வருவதால், வணிக அடிப்படையிலான சொத்துவரிக்கு சமமாக புகார் மனுதாரரது கட்டிடத்திற்கு அரசு வழிகாட்டுதல்களின்படி வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அதனால் வரி உயர்வு ஏற்பட்டது. என்ற விபரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

புகார் மனுதாரரது வரிவிதிப்பு கட்டிடத்தின் சொத்துவரி 01.04.2022 முதல் திருத்தியமைக்கப்பட்டது மற்றும் அதனைத் தொடர்ந்து 01.10.2024 முதல் உயர்த்தப்பட்ட

6 சதவீத சொத்துவரி ஆகியன அரசு உத்திரவுகள் மற்றும் வழிகாட்டுதல்கள்படி மேற்கொள்ளப்பட்டது விதிமுறைகளின்படி சரியானது.

எனவே, புகார் மனுதாரரது சொத்திற்கு மதுரை மாநகராட்சி தன்னிச்சையாக பாராபட்சத்துடன் வரி உயர்வு செய்யவோ, சொத்துவரி மாற்றியமைக்கவோ வழிவகை இல்லை. மேலும் மனுதாரர் 2025–26 இரண்டாம் அரையாண்டு வரை நிலுவையின்றி வரி செலுத்தியுள்ளார் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.03.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் Dr. R. அரவிந்தகுமார் சார்பாக அவரது மனைவி Dr.உமையாள் என்பவர் 25.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மதுரை மாநகராட்சி, எம்ஜஜி காலனி, அறிஞர் அண்ணா நகர், கதவு எண் 345–ல் அமைந்துள்ள எங்களுக்கு சொந்தமான NABH என்ற முகமையால் அங்கீகரிக்கப்பட்ட R.R. மருத்துவமனை என்ற பெயரில் ஏழை மக்களுக்காக இலவச அறுவை சிகிச்சை மற்றும் உயர்தர சிகிக்சை அளித்து இதுவரை எந்தவித புகார்இன்றி நடத்தி வருகிறோம்.

மேற்கண்ட மருத்துவமனைக்கு புதிய சொத்துவரி எண் 115/035/900580, பழைய சொத்துவரி எண் 115/16399 ஆகும். 01.04.2012 முதல் 31.03.2022 வரை எங்கள் மருத்துவமனைக்கு ஆண்டிற்கு ரூ.4,26,276/– சொத்துவரியும், 01.04.2022 முதல் 31.03.2024 வரை ஆண்டிற்கு ரூ.8,52,552/– சொத்து வரியாக செலுத்தி வருகிறோம். ஆனால் 01.04.2024 மற்றும் 31.03.2025–க்கு இடைப்பட்ட காலத்திற்கு சொத்துவரியாக ரூ.9,07,635 என்னிடமிருந்து வசூலிக்கப்பட்டது. மேலும் 01.04.2025 மற்றும் 31.03.2026–க்கு இடைப்பட்ட காலத்திற்கு ரூ.9,30,318/– செலுத்தும்படி நான் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளேன். எனது சொத்து, அதே தெருவில் உள்ள மற்ற கட்டிடங்களைக் போலவே வெறும் 7–$^{1}/_{2}$ செண்ட் (ஏழரை செண்ட்) மட்டுமே என்பதை இங்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

2010–ஆம் ஆண்டு முதல், எனது மருத்துவமனை கட்டிடத்தின் மீது விதிக்கப்படும் சொத்து வரி, அருகிலுள்ள வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அதே அளவு மற்றும் அதே இடத்தில் அமைந்துள்ள மற்ற கட்டிடங்களை விட கணிசமாக அதிகமாக உள்ளது. எனது சொத்தின் விலை, அதே தெருவில் உள்ள மற்ற கட்டிடங்களைப் போலவே ஏழரை சென்ட்கள் (ஏழரை சென்ட்கள்) மட்டுமே என்பதை இங்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வரியில் உள்ள பெரும் வேறுபாட்டை நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்த போது, நான் சுட்டிக்காட்டிய மற்ற கட்டிடங்களை விட எனது மருத்துவமனையின் பரப்பளவு அதிகம் என்பதே பதிலாக இருந்தது.

எனவே, என்னுடைய மருத்துவமனையின் கட்டிடத்தின்பரப்பளவைவிட கூடுதலாக உள்ள கட்டிடங்களுக்கு குறைந்த வரியும், எனது மருத்துவமனை கட்டிடத்தின் அளவு குறைவாக இருக்கும் நிலையில், அதிக சொத்துவரி விதித்திருப்பதை மறு பரிசீலனை செய்து உரிய முறையான சொத்துவரி விதிக்க வேண்டும் என்று உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்கள் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2–ன் உதவி வருவாய் அலுவலர் 25.03.2026 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள 8785 சதுர அடி பரப்பளவில் உள்ள வணிக கட்டிடத்திற்கு 01.04.2012 முதல் அரையாண்டு வரியாக ரூ.2,13,138/– என விதிகளின்படி வரி விதிக்கப்பட்டது.

அரசாணை எண் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள் 30.03.2022–ல் உள்ள வழிகாட்டுதலின்படி சொத்துவரி உயர்வு காரணி அடிப்படையில், பொதுச்சீராய்வின்போது 01.04.2022 முதல் மதுரை மாநகராட்சி உட்பட்ட அனைத்து மாநகராட்சியிலும் குடியிருப்புகள் மற்றும் குடியிருப்பு அல்லாத வரிவிதிப்புகளுக்கும் சொத்துவரி உயர்வு செய்யப்பட்டது.

அவ்வாறே இப்புகார் மனுதாரரது R.R. மருத்துவமனை கட்டிடம் 8,785 சதுர அடிக்கு சொத்துவரி வரிவிதிப்பு எண் 115/035/900580க்குரிய ஒரு அரையாண்டு சொத்துவரி ரூ.2,13,138/–லிருந்து ரூ.4,26,276/–ஆக சொத்துவரி உயர்வு காரணி அடிப்படையில் 01.04.2022 முதல் வரி உயர்வு செய்யப்பட்டது.

அதன்பிறகு தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 113 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள் 05.09.2024–ன்படி நடப்பில் இருந்த சொத்துவரி மீது 6 சதவீதம் உயர்வு செய்து சொத்துவரி உயர்த்தப்பட்டது.

மேலும் புகார் மனுதாரரது வரிவிதிப்பு கட்டிடம் மேற்படி அரசாணை எண் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள் 30.03.2022–ல் சுட்டிக்காட்டப்பட்ட அரசாணைபடி வணிக வகைப்பாட்டின் கீழ் வருவதால், வணிக அடிப்படையிலான சொத்துவரிக்கு சமமாக புகார் மனுதாரரது கட்டிடத்திற்கு அரசு வழிகாட்டுதல்களின்படி வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அதனால் வரி உயர்வு ஏற்பட்டது என்ற விபரம் சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் மனுதாரர் 2025–2026 இரண்டாம் அரையாண்டு வரை நிலுவையின்றி சொத்துவரி செலுத்தியுள்ளார்.

எனவே மனுதாரரின் மருத்துவமனை கட்டிடத்திற்கு அரசின் கொள்கை அடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணையின்படி சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும் இன்றைய விசாரணையில் மனுதாரர் தனது மருத்துவமனைக்கு பக்கத்தில் உள்ள வணிக வளாக கட்டிடத்திற்கு குறைவான சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தது தொடர்பாக, கள ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மனுதாரர் சார்பாக அவரது மனைவி Dr.உமையாள் என்பவரின் வாக்குமூலம், எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு), உதவி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை மாநகராட்சி, எம்ஜஜி காலனி, அறிஞர் அண்ணா நகர், கதவு எண் 345–ல் அமைந்துள்ள மனுதாரருக்கும் மற்றும் அவரது மனைவிக்கும் சொந்தமான NABH என்ற முகமையால் அங்கீகரிக்கப்பட்ட R.R. மருத்துவமனைக்கு புதிய சொத்துவரி எண் 115/035/900580, பழைய சொத்துவரி எண் 115/16399 ஆகும். 01.04.2012 முதல் 31.03.2022 வரை ஆண்டிற்கு ரூ.4,26,276/– சொத்துவரியும், 01.04.2022 முதல் 31.03.2024 வரை

ஆண்டிற்கு ரூ.8,52,552/– சொத்து வரியாக செலுத்தப்பட்டது என்பதும், ஆனால் 01.04.2024 மற்றும் 31.03.2025–க்கு இடைப்பட்ட காலத்திற்கு சொத்துவரியாக ரூ.9,07,635/– மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டது என்பதும், 01.04.2025 மற்றும் 31.03.2026–க்கு இடைப்பட்ட காலத்திற்கு ரூ.9,30,318/– செலுத்தும்படி மாநகராட்சியால் கேட்டுக் கொள்ளப்பட்டது என்பதும், 2010–ஆம் ஆண்டு முதல், தனது மருத்துவமனை கட்டிடத்தின் மீது விதிக்கப்படும் சொத்து வரி, அருகிலுள்ள வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அதே அளவு மற்றும் அதே இடத்தில் அமைந்துள்ள மற்ற கட்டிடங்களை விட கணிசமாக அதிகமாக உள்ளது என்பதும், வரியில் உள்ள வேறுபாட்டை மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தபோது, தன்னுடைய மருத்துவமனையின் பரப்பளவு அதிகம் என தெரிவிக்கப்பட்டது என்பதும், தன்னுடைய மருத்துவமனையின் கட்டிடத்தின் பரப்பளவைவிட கூடுதலாக உள்ள மற்ற கட்டிடங்களுக்கு குறைந்த வரியும், குறைவாக பரப்பளவு உள்ள தனது மருத்துவமனை கட்டிடத்திற்கு அதிக சொத்துவரி விதித்திருப்பதை மறு பரிசீலனை செய்து உரிய முறையான சொத்துவரி விதிக்க உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் மனுதாரர் சார்பாக அவரது மனைவி Dr.உமையாள் என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள 8785 சதுர அடி பரப்பளவில் உள்ள வணிக கட்டிடத்திற்கு 01.04.2012 முதல் அரையாண்டு வரியாக ரூ.2,13,138/– என விதிகளின்படி வரி விதிக்கப்பட்டது என்பதும், அரசாணை எண் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள் 30.03.2022–ல் உள்ள வழிகாட்டுதலின்படி சொத்துவரி உயர்வு காரணி அடிப்படையில், பொதுச்சீராய்வின்போது 01.04.2022 முதல் சொத்துவரி உயர்வு செய்யப்பட்டதின் அடிப்படையில்தான் மனுதாரரது 8,785 சதுர அடி R.R.மருத்துவமனை கட்டிடத்திற்கான சொத்துவரி வரிவிதிப்பு எண். 115/035/900580க்குரிய ஒரு அரையாண்டு சொத்துவரி ரூ.2,13,138/–லிருந்து 01.04.2022 முதல் சொத்துவரி ரூ.4,26,276/–ஆக உயர்வு செய்யப்பட்டது என்பதும், அதன்பிறகு தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 113 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள் 05.09.2024–ன்படி நடப்பில் இருந்த சொத்துவரி மீது 6 சதவீதம் உயர்வு செய்து சொத்துவரி உயர்த்தப்பட்டது என்பதும், மேற்படி மனுதாரரின் மருத்துவமனை வணிக வகைப்பாட்டின் கீழ் வருவதால், வணிக அடிப்படையிலான சொத்துவரிக்கு சமமாக மனுதாரரது கட்டிடத்திற்கு அரசு வழிகாட்டுதல்களின்படி வரிவிதிப்பு உயர்த்தப்பட்டது என்பதும், மனுதாரர் 2025–2026 இரண்டாம் அரையாண்டு வரை நிலுவையின்றி சொத்துவரி செலுத்தியுள்ளார் என்பதும், மனுதாரரின் மருத்துவமனை கட்டிடத்திற்கு அரசின் கொள்கை அடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணையின்படி சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது என்பதும், இருப்பினும் 25.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் தனது மருத்துவமனைக்கு பக்கத்தில் உள்ள வணிக வளாக கட்டிடத்திற்கு குறைவான சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தது தொடர்பாக, கள ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரருக்கு சொந்தமான R.R. மருத்துவமனை கட்டிடத்திற்கான புதிய சொத்துவரி எண் 115/035/900580 –க்கு அரசின் கொள்கை முடிவின் அடிப்படையில், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, அரசாணை நிலை எண் G.O. (Ms) No.53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022–ன்படி மதுரை மாநகராட்சியால் சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ள நிலையில், மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி வருவாய்

அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்படி மருத்துவமனைக்கு பக்கத்தில் உள்ள வணிக வளாக கட்டிடத்திற்கு குறைவான சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டதின் தொடர்பாக மதுரை மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதுமில்லை என்பதை உறுதி செய்யும் பொருட்டு புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள மருத்துவமனைக்கு அருகாமையில் உள்ள கட்டிடங்களை கள ஆய்வு மேற்கொண்டு அதனடிப்படையில் உரிய சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையருக்கு அறிவுறுத்துமாறு, மதுரை மாநகராட்சி ஆணையருக்கு, இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. Dr. R. அரவிந்தகுமார்,
பிளாட் எண் 318,
முதலாவது கிழக்கு மெயின் ரோடு
அண்ணா நகர்,
மதுரை–625 020.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை–625 002.

(3) உதவி ஆணையர்,
மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி, ரேஸ் கோர்ஸ் சாலை,
மதுரை–625 002.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

15/4/26
செயலாளர்.
15/4/26 2/10